**செய்தி வெளியீடு எண் : 608** **நாள்: 15.04.2022**

**செய்தி வெளியீடு**

**கற்புக்கரசி கண்ணகி (சித்திரைத் திங்கள் முழு நிலவு நாள்) விழா**

சித்திரைத் திங்கள் முழு நிலவு நாளை முன்னிட்டு, சென்னை மெரினா கடற்கரை, காமராசர் சாலையில் அமைந்துள்ள கண்ணகி திருவுருவச் சிலைக்கு 16.04.2022 அன்று காலை 10.00 மணியளவில், தமிழ்நாடு அரசின் சார்பில் மாண்புமிகு அமைச்சர் பெருமக்கள் கலந்து கொண்டு, மாலை அணிவித்து, மலர் தூவி மரியாதை செலுத்த உள்ளார்கள்.

தமிழர்களின் பண்பாட்டுச் சின்னமாகத் திகழும் வீரம் செறிந்த தீரப்பெண்மணி, காவிய நாயகி கண்ணகி ஆவார். தமிழர் பண்பாட்டின் அருமை பெருமைகளை அனைத்து தரப்பினரும் அறிந்து கொள்ளும் வகையில், பேரறிஞர் பெருந்தகை அண்ணா அவர்களின் எண்ணப்படி, 1968ஆம் ஆண்டு நடைபெற்ற உலகத்தமிழ் மாநாட்டினை முன்னிட்டு, முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள் தலைமையில் சிலம்புச் செல்வர் மா.பொ.சி. அவர்களால் 1968ஆம் ஆண்டு சனவரித் திங்கள் 2ஆம் நாள் கண்ணகியின் திருவுருவச் சிலை திறந்து வைக்கப்பட்டது.

முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள் கண்ணகியின் அருமை பெருமைகளை "காவிய நாயகி, கற்புக்கரசி, கலாச்சாரப் பொக்கிஷமாய்த் திகழ்ந்தகவள் கண்ணகி. தமிழர்களின் பண்பாட்டுச் சின்னமான கண்ணகியின் புகழ் வாழ்க, காவிய நாயகி கண்ணகியின் கீர்த்தி வாழ்க, கொற்றவனே குற்றம் புரிந்தவன் நீ; வீரம் செறிந்த தீரப் பெண்மணி கண்ணகியின் புகழ் வாழ்க! வாழ்க!" என்று போற்றியுள்ளார். மேலும், இடைப்பட்ட காலத்தில் கண்ணகியின் சிலை கடந்த 2001ஆம் ஆண்டு அகற்றப்பட்டதை எதிர்த்து நடந்த பல்வேறு அறப்போராட்டங்களின் எதிரொலியாக, முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள் முதலமைச்சராக ஆட்சிப் பொறுப்பேற்ற பின், 03.06.2001 அன்று அதே இடத்தில் கண்ணகி திருவுருவச்சிலையினைத் திறந்து வைத்தார்கள்.

தமிழக அரசின் சார்பில் ஒவ்வொரு ஆண்டும் சித்திரைத் திங்கள் முழுநிலவு நாள் அன்று சென்னையில், தமிழ்நாட்டின் கலாச்சாரச் சின்னமாகத் திகழ்ந்து வரும் கற்புக்கரசி கண்ணகியின் சிலைக்கு மாலை அணிவித்து மரியாதை செய்யப்பட்டு வருகிறது. இந்நிகழ்ச்சியில் மாண்புமிகு நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்கள், உள்ளாட்சி மன்ற அமைப்புகளின் பிரதிநிதிகள், அரசு உயர் அலுவலர்கள் மற்றும் முக்கியப் பிரமுகர்கள் கலந்து கொண்டு சிறப்பிக்க உள்ளார்கள்.

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை-9**

அரசின் செய்திகளை உடனுக்குடன் தெரிந்துகொள்ள :

tndiprnews tndipr tndipr TN DIPR www.dipr.tn.gov.in